**CMP.No.881/2025**

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2026</u>**

**சாட்சி –1**

**பெயர் – ஜெயபால் (72, த/பெ.வரதராஜன், குண்ணம்பூண்டி)**

1. கடந்த 14.12.2024 அன்று காலை 10.00 மணிளவில் நெல்லிமலை என்ற கிராமத்தில் இருந்தேன். சின்னபொன்மலையில் எனக்கு சொந்தமான இடத்தில் கிருஷ்ணன், சுமத்ரா, பூவாத்தாள் ஆகியோர்கள் 6 அடி சுவர் அமைப்பதாக எனக்கு தகவல் தெரிந்து நான் அங்கு சென்று அவர்களிடம் ஏன் என் இடத்தில் சுவர் அமைக்கிறிர்கள். நில அளவையரை வைத்து அளந்து உங்களிடத்தில் சுவர் கட்டிக்கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு கிருஷ்ணன் என்பவ்ர என்னை பார்த்து நீ என்ன மயிரா என்று ஆபசாமாக பேசினார். மேலும் என்னுடன் வந்த தாஸ் மற்றும் பிரபாகரன் ஆகியோர்களையும் அவர் அருவருக்க தக்க வகையில் பேசி, கடப்பரையால் குத்திவிடுவேன் எனவும் சாதி பெயரை சொல்லி திட்டியதாக புகார் அளித்துவிடுவேன் எனவும் மிரட்டல் விடுத்தார். சுமத்ரா மற்றும் பூவாத்தா ஆகியோ'ர்கள் தாஸ் என்பவரை அடித்துவிட்டனர். மேலும் சுமத்ரா என்பவர் பிரபாகரன் என்பவரை பார்த்து இங்கு இருந்து சென்றுவிடு இல்லையெனில் உனக்கும் அதே நிலைமமைதான் என்று மிரட்டினார். எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.